KALANJIYAM – International Journal of Tamil Studies
An international, peer-reviewed academic journal
e-ISSN: 2456-5148
Vol. 2 No. n10 (2019)

களஞ்சியம்
Peer-reviewed · Open access · Google Scholar
Crossref DOI · SJIF Impact Factor 3.5 · Quarterly
Online@: ngmtamil.in
Vol. 2 No. n10 (2019): KALANJIYAM May 2019

UGC Approved by Transparent Peer Review

சங்க இலக்கியத்தில் இராமாயணக் குறிப்புகள்

Ramayana Anecdotes in Sangam Literature

Dr. U. Alibava[1*]

[1] Professor and Head, Department of Tamil Studies, Bharathidasan University, Tiruchirappalli – 620024, Tamil Nadu, India. ORCID: https://orcid.org/0000-0002-2051-7002

*தொடர்புக்கு: alibavapkm@gmail.com

ARTICLE INFO

Article history
Received: 08 April 2019
Revised: 16 April 2019
Accepted: 22 April 2019
Published: 01 May 2019

Peer review
Double-blind peer review

Keywords
Sangam Literature
Ramayana
Valmiki
Purananuru
Akananuru
Sita
Rama
Tamil Literary Tradition

ABSTRACT

The Ramayana occupies a distinctive place in the Indian literary tradition. Although Valmiki's Sanskrit Ramayana is an early and influential account of the epic, references to its characters and episodes are also found in Tamil literature composed before Kambaramayanam. This article examines such Ramayana anecdotes preserved in Sangam literature and considers their significance as evidence of the early reception of the epic in the Tamil literary milieu. Particular attention is given to the reference in Purananuru 378, which recalls the monkeys handling the ornaments dropped by Sita, and the account in Akananuru 70, which describes Rama consulting his companions beneath a banyan tree while quieting the noise of the birds. By examining these poetic references in their literary contexts, the article highlights how episodes associated with the Ramayana were incorporated into Sangam poetry. These references demonstrate the familiarity of early Tamil poets with the epic tradition and reveal the interaction between Tamil literary culture and the wider Indian narrative heritage. The study thus draws attention to the value of Sangam poems as sources for understanding the antiquity, circulation and cultural adaptation of Ramayana narratives in Tamil.

ஆய்வுச் சுருக்கம்

இந்தியப் பண்பாட்டு மரபில் இராமாயணம் தனித்துவமான இடத்தைப் பெற்ற காப்பியமாகும். வடமொழியில் வால்மீகியால் காப்பிய வடிவம் பெற்ற இராமகாதை, தமிழிலக்கிய மரபில் கம்பராமாயணத்திற்கு முன்பே அறிமுகமாகியிருந்தது என்பதைச் சங்க இலக்கியப் பாடல்கள் தெளிவுபடுத்துகின்றன. குறிப்பாகப் புறநானூறு 378-ஆம் பாடலில் சீதையின் அணிகலன்களைக் குரங்குகள் எடுத்துப் புனைந்துகொள்ளும் நிகழ்வும், அகநானூறு 70-ஆம் பாடலில் இராமன் ஆலமரத்தடியில் பறவைகளின் ஒலியை அடக்கி ஆலோசனை செய்த நிகழ்வும் இராமாயணக் கதையின் தொன்மையான தமிழ்ப் பதிவுகளாக அமைகின்றன. இக்குறிப்புகள் வெறும் இதிகாசச் செய்திகளாக அமையாமல், அக்காலத் தமிழரின் கற்பனை, உவமைத்திறன், இலக்கியப் பரிமாற்றம், பண்பாட்டுத் தொடர்பு ஆகியவற்றை வெளிப்படுத்துகின்றன. இக்கட்டுரை சங்க இலக்கியங்களில் இடம்பெறும் இராமாயணக் குறிப்புகளை மூலப்பாடல்களின் துணையுடன் ஆராய்ந்து, அவற்றின் இலக்கிய மற்றும் பண்பாட்டுச் சிறப்புகளை நிறுவ முற்படுகிறது.

திறவுச்சொற்கள்: சங்க இலக்கியம், இராமாயணம், இராமன், சீதை, புறநானூறு, அகநானூறு, இலக்கியப் பண்பாடு, இதிகாச மரபு.

© 2019 The Author(s) · CC BY 4.0 · OPEN ACCESS

How to cite this article: Alibava, U. (2019). சங்க இலக்கியத்தில் இராமாயணக் குறிப்புகள் [Ramayana Anecdotes in Sangam Literature]. *KALANJIYAM – International Journal of Tamil Studies, 2*(n10), 1–12.
Copyright and licence: © 2019 The Author(s). This is an open access article distributed under the terms of the Creative Commons Attribution 4.0 International License (CC BY 4.0), which permits unrestricted use, distribution and reproduction in any medium, provided the original work is properly cited. https://creativecommons.org/licenses/by/4.0/

தமிழ் இலக்கிய வரலாறு என்பது ஒரு மொழியின் படைப்புப் பெருமையை மட்டும் எடுத்துரைக்கும் வரலாறு அன்று; அது ஓர் இனத்தின் வாழ்வியல், நம்பிக்கை, பண்பாடு, அரசியல், அறம், கலை, சமயச் சிந்தனை ஆகிய அனைத்தையும் உள்ளடக்கிய அறிவுக் கருவூலமாகும். இத்தகைய சிறப்புடைய சங்க இலக்கியங்கள் தமிழரின் தொன்மையான வாழ்வியலைப் பதிவு செய்ததோடு, பிறமொழி இலக்கிய மரபுகளுடனான தொடர்புகளையும் நுட்பமாகப் பதிவு செய்துள்ளன.

சங்க இலக்கியங்களில் காணப்படும் இராமாயணக் குறிப்புகள் இவ்வகையில் தனித்த ஆய்வுக்குரியவை. கம்பர் பன்னிரண்டாம் நூற்றாண்டில் இராமகாதையைத் தமிழில் காப்பிய வடிவில் விரிவாகப் படைப்பதற்கு முன்னரே, இராமன், சீதை, இராவணன், குரங்குகள் தொடர்பான நிகழ்வுகள் சங்கப் பாடல்களில் இடம்பெற்றுள்ளன. இதன்மூலம் இராமகாதைத் தமிழ்ச் சமூகத்தில் முன்னரே அறிமுகமாகி, மக்கள் நினைவிலும் புலவர் மரபிலும் நிலைபெற்றிருந்தது என்பதை அறியமுடிகிறது.

ஒரு காப்பியத்தின் முழுமையான கதை அமைப்பு ஒரு மொழியில் தோன்றுவதற்கு முன்னரே, அக்காப்பியத்தின் நிகழ்ச்சிகள், கதைமாந்தர்கள், கற்பனைச் சித்திரங்கள் ஆகியவை மற்றொரு மொழியின் இலக்கியத்தில் இடம்பெறுவது இலக்கியப் பரிமாற்றத்தின் முக்கியமான அடையாளமாகும். சங்க இலக்கியங்களில் காணப்படும் இராமாயணக் குறிப்புகளும் இத்தகைய இலக்கியப் பரிமாற்றத்தின் சான்றுகளாகத் திகழ்கின்றன.

சங்க இலக்கியத்தில் இராமாயண மரபின் தொன்மை

இராமாயணம் என்பது ஒரு குறிப்பிட்ட காலத்தில் தோன்றிய இலக்கியப் படைப்பு என்பதைக் கடந்து, பல்வேறு மொழிகளிலும் பல்வேறு பண்பாட்டுச் சூழல்களிலும் வளர்ந்து வந்த கதை மரபாகும். இம்மரபு தமிழில் எப்போது அறிமுகமானது என்ற வினாவிற்கு விடையளிக்கும் முதன்மைச் சான்றுகளாகப் புறநானூறும் அகநானூறும் விளங்குகின்றன.

சங்க இலக்கியங்களில் இராமாயண நிகழ்ச்சிகள் முழுமையான காப்பியக் கதையாக இடம்பெறவில்லை. மாறாக, குறிப்பிட்ட நிகழ்ச்சிகள் உவமை, வரலாற்றுச் சுட்டு, பண்பாட்டுக் குறிப்பு ஆகிய நிலைகளில் இடம்பெற்றுள்ளன.

இவற்றில் குறிப்பிடத்தக்கது, புறநானூறு 378-ஆம் பாடலும் அகநானூறு 70-ஆம் பாடலும் ஆகும். இவ்விரு பாடல்களும் இராமகாதையின் வெவ்வேறு நிகழ்வுகளை எடுத்துக்காட்டுகின்றன.

புறநானூற்றில் சீதையின் அணிகலன் நிகழ்வு

சங்க இலக்கியத்தில் இராமாயணக் கதையை நேரடியாக நினைவூட்டும் சிறப்பான பாடலாகப் புறநானூற்றின் 378-ஆம் பாடல் அமைகிறது. இப்பாடலைப் பாடியவர் ஊன்பொதி பசுங்குடையார். செருப்பாழி எறிந்த இளஞ்சேட் சென்னி என்ற சோழ மன்னனின் கொடைச் சிறப்பைப் பாடும் இப்புலவர், இராமாயண நிகழ்வு ஒன்றினை உவமையாகக் கையாளுகின்றார். அரசன் அளித்த பெருஞ்செல்வத்தைப் பெற்ற புலவரின் குடும்பத்தார் அடைந்த மகிழ்ச்சி அனுபத்தை நயமாகக் கூறி, அவனது கொடை இயல்பைப் பாடாண் திணையிலும் இயன்மொழித் துறையிலும் போற்றுகின்றார்.

தென்பரதவர் மிடல் சாய,
வட வடுகர் வாள் ஓட்டிய
தொடையமை கண்ணித் திருந்துவேல் தடக்கைக்
கடுமா கடைஇய விடுபரி வடிம்பின்,
நற்றார்க் கள்ளின், சோழன் கோயில்,
புதுப்பிறை யன்ன சுதைசெய் மாடத்துப்
பனிக்கயத் தன்ன நீள்நகர் நின்று, என்
அரிக்கூடு மாக்கிணை இரிய ஒற்றி,
எஞ்சா மரபின் வஞ்சி பாட,
எமக்கென வகுத்த அல்ல, மிகப்பல
மேம்படு சிறப்பின் அருங்கல வெறுக்கை
தாங்காது பொழிதந் தோனே; அதுகண்டு,
இலம்பாடு உழந்தஎன் இரும்பேர் ஒக்கல்,
விரல்செறி மரபின செவித்தொடக் குநரும்,
செவித்தொடர் மரபின விரற்செறிக் குநரும்,
அரைக்கமை மரபின மிடற்றியாக் குநரும்,
மிடற்றமை மரபின அரைக்குயாக் குநரும்,
கடுந்தெறல் இராமன் உடன்புணர் சீதையை
வலித்தகை அரக்கன் வௌவிய ஞான்றை,
நிலஞ்சேர் மதர்அணி கண்ட குரங்கின்
செம்முகப் பெருங்கிளை இழைப்பொலிந் தாஅங்கு,
அறாஅ அருநகை இனிதுபெற் றிகுமே
இருங்கிளைத் தலைமை எய்தி,
அரும்படர் எவ்வம் உழந்ததன் தலையே (புறம். 378)

எனும் பாடலில் இளஞ்சேட்சென்னியைப் புலவர், 'தென்பரதவரின் குறும்புகள் அடங்கி ஒடுங்கவும் வட வடுகரின் வாளால் தமிழகத்துக்கு நேர்ந்த கேடுகள் நீங்கவும், அவரை ஒடுக்கி மேம்பட்டவன் இவன்' என்று அடையாளம் காட்டுகிறார். தொடர்ந்து, 'இச்சோழனின் நெடுநகரிலே, வெண்சுதை மாடத்தின் முற்றத்திலே நின்று

என்னுடைய கிணையை இயக்கி, எஞ்சா மரபினனான சோழனின் வஞ்சிச் சிறப்பைப் போற்றிப் பாடினேன். எமக்கென இயற்றப்படாத, அரசர்க்கே உரிய நல்ல அணிகலன்கள் பலவற்றையும் அவன் எமக்கு ஏராளமாக அளித்தான். அதனைக் கொண்டு என் சுற்றத்தார்களிடமும் உறவினர்களிடமும் கொண்டு கொடுத்தேன்' எனப் பாடி ஊன்பொதி பசுங்குடையார் பாட்டை வழிநடத்திச் செல்கிறார். அடுத்து இளஞ்சேட்சென்னி கொடுத்த பொருட்களைப் பெற்ற சுற்றத்தினர்களின் நிலை என்னவாக இருந்தது என்பதை அவர் படம்பிடித்துக் காட்டுகிறார். பொருட்களைப் பார்த்த அவர்கள் என்ன செய்வது என்று அறியாமல் திகைத்து நின்றனர் என்கிறார். விரலில் அணிவனவற்றைக் காதிலும், காதில் அணிவனவற்றை விரலிலும் அணிந்து மகிழ்ந்தனர் என்று காட்சிப்படுத்துகிறார். அந்தக் காட்சியை இராவணன் சீதையைக் கடத்திச் சென்ற போது சீதை தான் அணிந்திருந்த அணிகளைக் கழற்றி வீசிக் கொண்டே வந்தாள். அதை எடுத்து அணிந்து பார்த்துக் கொண்டிருந்த குரங்குகளின் செயல்களோடு ஒப்பிடும் இராமாயணக் கதையோடு இணைத்துப் பார்த்து, 'சீதையின் அணிகலன்களைக் கண்டெடுத்த குரங்கினம் எவ்வாறு அணிகளை மாற்றி மாற்றி அணிந்து பார்த்ததோ அந்த நிகழ்வோடு ஒப்பிட்டுக் கூறப்படும் தன்மை போலிருந்தது அந்தக் காட்சி' எனக் காட்டுகிறார். அந்தக் காட்சியை உவமைப்படுத்திக் காட்டிய புலவர் 'அத்தோடு என் சுற்றத்தின் வறுமையும் தொலைந்தது! அவர் முகத்திலே நகையும் அரும்பிற்று' என்று பாடலை நிறைவு செய்கிறார். இதனை,

> கடுந்தெறல் இராமன் உடன்புணர் சீதையை
> வலித்தகை அரக்கன் வௌவிய ஞான்றை
> நிலம்சேர் மதர்அணி கண்ட குரங்கின்
> செம்முகப் பெருங்கிளை இழைப்பொலிந் தாங்கு
> அறாஅ அருநகை இனிதுபெற் றிகுமே
> இருங்கிளைத் தலைமை எய்தி,
> அரும்படர் எவ்வம் உழந்ததன் தலையே (புறம். 378)

எனும் அடிகள் காட்டுகின்றன. இவ்வடிகள் இப்புலவர் காலத்திலேயே இராம காதை தமிழகத்தில் வழக்கில் இருந்திருக்கிறது என்பதற்கான சரியான சான்றாகத் திகழ்கிறது. இக்காட்சி நல்ல நகைச் சுவைக் காடசியாகவும் புலவரால் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது என்பதையும் இதில் காணமுடிகிறது.

உவமையின் உள்ளுறைச் சிறப்பு

இப்பாடலில் இடம்பெறும் செய்தி மிகவும் சுவையானது. இராமனுடன் வாழ்ந்த சீதையை வலிமைமிக்க அரக்கனாகிய இராவணன் வஞ்சித்துக் கவர்ந்து செல்கின்றான். அப்போது சீதை தான் அணிந்திருந்த அணிகலன்களை ஒவ்வொன்றாகக் கீழே வீசுகின்றாள். அவற்றைக் கண்ட குரங்குகள் அவற்றை எடுத்துக்கொள்கின்றன. ஆனால் எந்த அணிகலனை எந்த உறுப்பில் அணிய

வேண்டும் என்பது அவற்றுக்குத் தெரியவில்லை. எனவே அவை அணிகலன்களை மாற்றி மாற்றி அணிந்து மகிழ்கின்றன.

இக்காட்சியைப் புலவர் இளஞ்சேட் சென்னியிடம் பரிசில் பெற்ற பாணனின் உறவினர்களுடன் ஒப்பிடுகின்றார். வறுமையில் வாழ்ந்த அவர்கள், திடீரெனக் கிடைத்த விலைமதிப்பற்ற அணிகலன்களை அணியும் முறையறியாமல் உடலின் பல்வேறு உறுப்புகளில் மாற்றி மாற்றி அணிந்து அழகு பார்த்தனர். இக்காட்சியைக் கண்டு புலவன் மகிழ்ந்தான் என்பதே பாடலின் பொருள்.

ஒரு புறத்தில் இராமாயணக் கதையில் இடம்பெறும் குரங்குகள்; மறுபுறத்தில் வறுமையிலிருந்து செல்வநிலைக்கு வந்த பாணனின் சுற்றத்தார். இரு நிகழ்வுகளுக்கும் இடையிலான பொதுத்தன்மையைப் புலவர் மிக இயல்பாக இணைக்கின்றார்.

இங்கு இராமாயணம் வெறும் கதைப் பின்னணியாக மட்டும் அமையவில்லை. அது மக்களிடையே ஏற்கெனவே அறிமுகமான பண்பாட்டுச் செய்தியாக விளங்கியிருக்கிறது. இல்லையெனில், சீதையின் அணிகலன்களை எடுத்துக் குரங்குகள் அணிந்த நிகழ்வைக் கூறி, பாணனின் உறவினர்களின் செயல்களைப் புலவர் எளிதில் விளக்கியிருக்க இயலாது.

இப்பாடலில் இடம்பெறும் குரங்குகளின் செயல்பாடு தனித்துவமான காட்சிச் சித்திரமாகும். விலங்குகளின் இயல்பையும் மனிதர்களின் செயல்பாட்டையும் இணைத்து நகைச்சுவையை உருவாக்கியுள்ளார் புலவர். இராமாயணக் கதை தமிழ்ப் புலவரின் கற்பனைக்கு உட்பட்டு இந்தப் புறநானூற்றுப் பாடலில் மறுவடிவம் பெறுகிறது.

அகநானூற்றில் இராமனின் ஆலோசனைக் காட்சி

புறநானூற்றில் இராவணன் சீதையைக் கவர்ந்துசெல்லும் நிகழ்வு இடம்பெற, அகநானூற்றில் இராமன் இலங்கைப் போருக்கு முன்னர் ஆலோசனை செய்த நிகழ்வு,

வெல்வேல் கவுரியர் தொன்முது கோடி
முழங்குஇரும் பௌவம் இரங்கும் முன்துறை
வெல்போர் இராமன் அருமறைக்கு அவித்த
பல்வீழ் ஆலம் போல
ஒலிஅவிந் தன்றுஇவ் அழுங்கல் ஊரே (அகம். 70)

எனும் பாடலில் இடம் பெறுகிறது. நெய்தல் திணையைச் சார்ந்த இப்பாடலை மதுரைத் தமிழ்க் கூத்தனார் கடுவன் மள்ளனார் எனும் புலவர் பாடியுள்ளார்.

இராமனின் தலைமைப் பண்பு

இப்பாடலில் இடம்பெறும் இராமாயண நிகழ்வு தனித்துவமானது. பாண்டியர்களின் பழமையான கடற்கரைத் துறைமுகமான கோடியில், கடலின் பேரொலி கேட்டுக்கொண்டிருக்கும் சூழலில் இராமன் ஆலமரத்தடியில் அமர்ந்து

போர்த் திட்டம் குறித்து ஆலோசனை செய்கின்றான். அப்போது ஆலமரத்தின் விழுதுகளிலும் கிளைகளிலும் அமர்ந்திருந்த பறவைகள் ஒலித்துக் கொண்டிருக்கின்றன. இராமன் தனது ஆலோசனைக்குத் தடையாக இருந்த பறவைகளின் ஒலியை அடக்குகின்றான்.

இதனைப் புலவர் தலைவியின் காதல் வாழ்க்கையோடு தொடர்புபடுத்துகின்றார். தலைவனும் தலைவியும் கொண்டிருந்த காதலைப் பற்றி ஊரார் அலர் தூற்றுகின்றனர். தலைவன் தலைவியை மணந்துகொண்டவுடன் அந்தப் பழிச்சொற்கள் அனைத்தும் அடங்கிவிடுகின்றன. இராமனின் கட்டளைக்குப் பணிந்து பறவைகள் அமைதியடைந்ததைப் போல, தலைவனின் திருமணத்தால் ஊரார்ின் அலரும் அடங்கிவிட்டது என்பது இப்பாடலின் உவமை நயம்.

இப்பாடலில் இராமன் வெற்றிபெறும் வீரனாக மட்டுமன்றி, சிறந்த ஆலோசனையா ளனாகவும் தலைமைப் பண்பு மிக்கவனாகவும் சித்திரிக்கப்படுகின்றான். போரில் வெற்றி பெறுவதற்கு வீரம் மட்டுமன்றி அறிவும் திட்டமிடுதலும் அவசியம் என்பதை இந்நிகழ்வு மறைமுகமாக உணர்த்துகின்றது.

தனுஷ்கோடியின் வரலாற்றுச் சிறப்பு

அகநானூற்றுப் பாடலில் இடம்பெறும் தொன்முது கோடி என்ற தொடர் ஆய்வுக்குரியது. கோடி என்பது தனுஷ்கோடியைக் குறிக்கும் என உரை விளக்குகிறது. கடற்கரைச் சூழல், கடலின் ஒலி, ஆலமரம், இராமனின் ஆலோசனை ஆகியவை ஒருங்கிணைந்து ஒரு வரலாற்றுப் பின்னணியை உருவாக்குகின்றன.

இதன் வழியாக இராமாயண நிகழ்வு தமிழ்நாட்டின் புவியியல் அமைப்புகளோடும் இணைந்திருந்ததை அறியமுடிகிறது. இராமகாதை வடஇந்திய நிலப்பரப்பைச் சார்ந்த கதையாக மட்டும் பார்க்கப்படாமல், தென்னிந்தியக் கடற்கரைப் பகுதிகளுடனும் தொடர்புபடுத்தப் பட்டிருந்தது என்பதற்கான இலக்கியச் சான்றாக இப்பாடல் அமைகிறது.

இராமாயணக் கதைச் செய்தி அகத்திணை இலக்கியத்தின் காதல் உணர்வை விளக்குவதற்குப் பயன்படுத்தப்பட்டுள்ளதை இப்பாடலின் மூலம் அறியமுடிகிறது. இதனை இப்பாடலின் தனித்துவமாகவும் பார்க்கமுடிகிறது.

கலித்தொகையில் இராவணன் பற்றிய குறிப்பு

இராமாயணக் கதை மரபில் இராவணன் ஒரு முக்கியமான கதைமாந்தன். அவனுடைய வீரம், ஆணவம், சிவபெருமானோடு தொடர்புடைய நிகழ்வுகள் ஆகியவை இந்திய இலக்கிய மரபில் பல்வேறு வடிவங்களில் இடம்பெற்றுள்ளன.

இராவணன் தொடர்பான கைலாய மலையைப் பெயர்த்தெடுக்க முயன்ற நிகழ்வுடன் தொடர்புடைய குறிப்பு கபிலர் பாடிய கலித்தொகை 38ஆம் பாடலில் இடம்பெற்றுள்ளது. சிவபெருமானும் உமையம்மையும் அமர்ந்திருந்த கைலாய

மலையை இராவணன் தனது பத்துத் தலைகளாலும் இருபது கைகளாலும் பெயர்த்தெடுக்க முயன்ற புராண நிகழ்வை,

இமையவில் வாங்கிய ஈர்ஞ்சடை அந்தணன்
உமையமர்ந் துயர்மலை இருந்த னாக
ஐயிரு தலையின் அரக்கர் கோமான்
தொடிப்பொலி தடங்கையின் கீழ்புகுந்து
அம்மலை எடுக்கல் செல்லாது உழப்பவன் போல (கலித். 38)

எனும் அடிகள் நினைவூட்டுகின்றன.

இந்நிகழ்வு இராமாயணத்தின் முதன்மைக் கதையான சீதையைக் கவர்தல், இலங்கைப் போர் போன்றவற்றுடன் நேரடியாகத் தொடர்புடையதல்ல. எனினும் இராவணனைச் சுற்றி வளர்ந்த இதிகாசப் புராண மரபு சங்ககால இலக்கியச் சூழலில் அறிமுகமாகியிருந்ததற்கான துணைச்சான்றாக இருக்கின்றதைக் காணமுடிகிறது.

பரிபாடலில் அகலிகை கதை மரபு

இராமாயண மரபுடன் தொடர்புடைய மற்றொரு நிகழ்வு அகலிகை பற்றியதாகும். கௌதம முனிவரின் மனைவியான அகலிகை, இந்திரனுடன் தொடர்புபடுத்தப்பட்ட நிகழ்வின் காரணமாகச் சாபம் பெறும் கதை இந்தியப் புராண மரபில் இடம்பெறுகிறது. பின்னாளில் இராமன் அவளுக்குச் சாபவிமோசனம் அளிக்கும் நிகழ்வு இராமாயணக் கதையின் முக்கியமான பகுதியாக வளர்ச்சியடைந்தது.

பரிபாடல் 19-ஆம் பாடலுடன் தொடர்புடைய உரை விளக்கங்களில் திருப்பரங்குன்றத்தில் காணப்பட்ட ஓவியங்களில் அகலிகை, இந்திரன், கௌதமன் ஆகியோர் தொடர்பான கதைச் சித்திரம் இடம்பெற்றதாகக் குறிப்பிடப்படுகிறது. திருப்பரங்குன்றத்தை வழிபட வருவோர் காணும் காட்சியைப் புலவர் நப்பண்ணனார் பாடுகிறார். அதில் ஒன்றுதான் அவர் காட்டும் சித்திரக் காட்சி.

கோடைக்காலம் உண்டாகுமாறு வரும் இருசுடர்களும் வானவட்டத்தே பொருந்தியுள்ள சுடர்நிலைகளை ஆராய்ந்து, அவற்றின் நுட்பங்களைச் சிலர் ஆராய்ந்து கொண்டிருப்பார்கள். ‘இரதி இவள்; காமன் இவன்’ என்று, திருக்கோயிற் சிற்பங்களுள் இரண்டைக் காட்டிக் காமங்கொண்டோர் அருகிருந்தாரைக் கேட்ப அவர்கட்கு விடையளித்தபடி சிலர் இருந்தனர் என்று காட்டிவரும் புலவர் தொடர்ந்து, “இவன் இந்திரனாகிய பூனை; இவள் அகலிகை; இவன் புலர்காலைப் பொழுதில் நீராடச் சென்றவனாகிய கவுதமன்; இவன் சினங்கொண்டு சபிக்க அகலிகை பெற்ற கல்லுருவம் இது; இவை நேர்ந்த கதை இவ்வாறு” என்று அதனைச் சொல்லியபடி இருந்தனர் சிலர். இத்தகைய பலவான ஓவியங்களைக் கொண்டு விளங்குவது, ‘எழுத்துநிலை மண்டபம்’ என்னும் திருக்கோயிற் பகுதியாகும். அதனைச் சார்ந்தவர், ஒவ்வொன்றையும் சுட்டிக் காட்டுவோராகவும், சுட்டப்பட்டவற்றிற்கு விளக்கம்

கூறுவோராகவும் விளங்கினர். உயரமான மூங்கில்கள் பரந்து நிழல் செய்தபடி விளங்கும், அகன்ற பாறைப்பகுதியாகிய பரந்த இடத்திலே அமைந்திருந்த மண்டபம் எழுத்துநிலை மண்டபம் ஆகும். அது, இத்தகைய மங்கல நிலையோடு, பரங்குன்றத்தே விளங்கும் திருமால் மருகனின் திருக்கோயிலின் ஒரு பக்கத்தே, மிகத் தெளிவான அமைப்புக்களோடு காணப்படும் எனப் புலவர் காட்சிப் படுத்துவது,

என்றூழ் உறவரும் இருசுடர் நேமி
ஒன்றிய சுடர்நிலை யுள்படு படுவோரும்
இரதி காமன் இவளிவன் எனாஅ
விரகியர் வினவ வினாவிறுப் போரும்
இந்திரன் பூசை இவளக லிகையிவன்
சென்ற கவுதமன் சினனுறக் கல்லுரு
ஒன்றிய படியிதென்று உரைசெய் வோரும்
இன்ன பலபல எழுத்துநிலை மண்டபம்
துன்னுநர் சுட்டவும் சுட்டறி வுறுத்தவும்
நேர்வரை விரியறை வியலிடத் திழைக்கச்
சோபன நிலையது துணிபரங் குன்றத்து
மாஅல் மருகன் மாட மருங்கு (பரி. 19 : 46 - 57)

எனும் அடிகளில் வெளிப்படுகிறது.

இந்திரன் பூனை வடிவில் இருப்பதும், அகலிகை கல்லுருவானதும், கவுதம முனிவரின் உருவமும் ஓவியமாகத் தீட்டப்பட்டிருந்த செய்தி இதில் இடம்பெறுகிறது. சங்க இலக்கியத்தில் அகலிகைத் தொன்மம் இடம்பெற்றுள்ள முக்கியமான சான்றாகவும் இது திகழ்கிறது. இப்பாடல் ஒரு முக்கியமான பண்பாட்டுச் செய்தியை உணர்த்துகிறது. இலக்கியம் என்பது எழுத்து வடிவில் மட்டும் கதை மரபைப் பாதுகாப்பதில்லை. ஓவியம், சிற்பம், வழிபாடு, கலை நிகழ்ச்சிகள் ஆகியவற்றின் வழியாகவும் ஒரு சமூகத்தின் நினைவில் கதைகள் நிலைபெறுகின்றன என்பதையும் காட்டுவதாக இப்பாடல் அமைந்துள்ளது.

இருப்பினும் அகலிகை நிகழ்வை இராமன் நேரடியாகச் சாபவிமோசனம் அளித்ததாகக் கூறும் முழுமையான இராமாயண நிகழ்வுடன் ஒன்றிணைத்துவிடாமல், அதன் புராணப் பின்னணியைத் தனியாக அணுகுவது பொருத்தமானது.

சங்க இலக்கியமும் இராமாயணமும்

சங்க இலக்கியங்களில் இடம்பெறும் இராமாயணக் குறிப்புகளை ஒப்பீட்டாய்வு செய்வதன் மூலம் அவற்றின் இலக்கியத் தனித்துவத்தை மேலும் தெளிவாக உணரலாம்.

புறநானூற்றில் சீதையின் அணிகலன்களைக் குரங்குகள் கண்டெடுத்து அவற்றைத் தவறான முறையில் அணிந்துகொள்ளும் காட்சி இடம்பெறுகிறது. வால்மீகி இராமாயணத்தின் கிட்கிந்தா காண்டத்தில் சீதையின் அணிகலன்கள் சுக்கிரீவனிடம் காட்டப்படும் நிகழ்வு காணப்படுகிறது. ஆனால் சங்கப் பாடலில் காணப்படும் நகைச்சுவைச் சித்திரம் தனித்துவமானது.

அதேபோன்று அகநானூற்றில் இராமன் ஆலமரத்தடியில் பறவைகளின் ஒலியை அடக்கி ஆலோசனை செய்வதாகக் குறிப்பிடப்படுகிறது. இந்தக் காட்சி வால்மீகி இராமாயணத்தின் வழக்கமான கதை விவரிப்பில் இவ்வடிவில் இடம்பெறவில்லை.

இதிலிருந்து சங்கப் புலவர்களுக்குக் கிடைத்திருந்த இராமகாதை மரபு, பின்னாளில் நிலைபெற்ற இராமாயணப் பிரதிகளுடன் முழுமையாக ஒன்றுபடவில்லை என்பதை அறியலாம். ஒரு கதை வெவ்வேறு மொழிகளில் பரவும்போது, அதன் அடிப்படைக் கரு நிலைத்திருந்தாலும், சில நிகழ்ச்சிகள் உள்ளூர்க் கற்பனைக்கும் பண்பாட்டுச் சூழலுக்கும் ஏற்ப மாறுபடுகின்றன.

இராமாயணக் குறிப்புகள் உணர்த்தும் பண்பாட்டுக் கூறுகள்

சங்க இலக்கியங்களில் இராமாயணக் குறிப்புகள் இடம்பெறுவது வெறும் இலக்கிய ஒற்றுமையாக மட்டும் அமையவில்லை. அவை அக்காலச் சமூகத்தின் பண்பாட்டுத் தொடர்புகளையும் வெளிப்படுத்துகின்றன.

இதிகாசக் கதைகளின் மக்கள் அறிமுகம்

புறநானூற்றிலும் அகநானூற்றிலும் இராமாயண நிகழ்வுகள் உவமைகளாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன. உவமை சிறப்பாகச் செயல்பட வேண்டுமெனில் உவமையாகக் கூறப்படும் பொருள் வாசகருக்கும் கேட்போருக்கும் ஏற்கெனவே அறிமுகமானதாக இருக்க வேண்டும். இதனை அடிப்படையாகக் கொண்டு பார்க்கும்போது, இராமாயணக் கதைகள் சங்ககால மக்களிடையே வாய்மொழி மரபு, கதைசொல்லல், கலை நிகழ்ச்சிகள் அல்லது பிற பண்பாட்டுத் தொடர்புகள் வாயிலாகப் பரவியிருக்கலாம் எனக் கருதலாம்.

வட - தென் இலக்கியப் பரிமாற்றம்

தமிழ் இலக்கிய மரபு தனித்துவமான வளர்ச்சியைப் பெற்றிருந்தாலும், அது பிறமொழி இலக்கியங்களுடன் தொடர்பற்றுத் தனித்து வளர்ந்ததன்று. சங்க இலக்கியங்களிலேயே வடஇந்திய அரசுகள், மக்கள், வணிகம், அரசியல் நிகழ்வுகள் பற்றிய பல குறிப்புகள் காணப்படுகின்றன. அதேபோன்று இராமாயணக் குறிப்புகளும் தமிழுக்கும் வடமொழி மரபுக்கும் இடையிலான பண்பாட்டுத் தொடர்புகளை ஆராய்வதற்குத் துணைபுரிகின்றன.

உவமை வழி இதிகாசப் பயன்பாடு

சங்கப் புலவர்களின் தனித்துவமான திறன், இதிகாச நிகழ்வுகளைத் தங்களது பாடல்களின் உணர்வோடு இணைத்துக் காட்டுவதில் வெளிப்படுகிறது. புறநானூற்றில் செல்வம் பெற்ற பாணனின் சுற்றத்தாரை விளக்குவதற்கும், அகநானூற்றில் காதல் தொடர்பான அலர் அடங்கியதை விளக்குவதற்கும் இராமாயண நிகழ்வுகள் பயன்படுத்தப்பட்டுள்ளன.

தமிழரின் இலக்கியத் தனித்துவம்

வடமொழி இதிகாச நிகழ்வுகளை எடுத்துக்கொண்டாலும், அவற்றைத் தமது கவிதைத் தேவைக்கு ஏற்ப மாற்றியமைக்கும் படைப்பாற்றல் சங்கப் புலவர்களிடம் காணப்படுகிறது. இராமாயண நிகழ்ச்சிகள் சங்கப் பாடல்களில் இடம்பெறுவது தமிழிலக்கியத்தின் தனித்தன்மையைப் பாதிக்கவில்லை. மாறாக, பிறமொழிக் கதை மரபுகளைத் தமது மொழியின் கவித்துவ ஆற்றலோடு இணைத்துக்கொள்ளும் தமிழின் திறனை வெளிப்படுத்துகிறது.

கம்பராமாயணத்திற்கு முந்தைய இராமகாதை மரபு

தமிழில் இராமாயணம் என்றவுடன் நினைவுக்கு முதலில் வருவது கம்பரின் இராமாவதாரமே. கம்பர் இராமகாதையைத் தமிழின் கவிதை மரபு, காப்பியக் கட்டமைப்பு, அணியிலக்கணம், அறச்சிந்தனை ஆகியவற்றோடு இணைத்து உயர்ந்த காப்பியமாகப் படைத்துள்ளார். ஆனால் இராமகாதை தமிழில் கம்பருக்குப் பின்னரே அறிமுகமானது என்று கூறுவது பொருத்தமானதன்று. புறநானூறு 378, அகநானூறு 70 ஆகிய பாடல்களுடன் கலித்தொகை 38, பரிபாடல் 19 ஆகிய பாடல்களும் கம்பருக்கு முற்பட்ட காலத்திலேயே இராமகாதை தமிழ்ச் சமூகத்தில் அறிமுகமாகியிருந்ததை நிறுவுகின்றன.

மேலும், சிலப்பதிகாரத்திலும் இராமாவதாரம் தொடர்பான செய்திகள் இடம்பெறுகின்றன. கோவலனுக்கு ஆறுதல் கூறும் பகுதியில் இராமனுடைய வனவாசமும் சீதையைப் பிரிந்த துயரமும் குறிப்பிடப்படுகின்றன. சிலப்பதிகாரத்தின் ஆய்ச்சியர் குரவையிலும் இராமனின் வீரச்செயல்கள் திருமாலின் அவதாரச் சிறப்புடன் இணைத்துப் பாடப்படுகின்றன.

இவ்வாறு சங்க இலக்கியங்களில் சுருக்கமான நிகழ்ச்சிக் குறிப்புகளாகத் தொடங்கிய இராமகாதை மரபு, சிலப்பதிகாரத்தில் புராணச் சிறப்புடன் விரிவடைந்து, பின்னர் கம்பரின் காப்பியத்தில் பேரிலக்கிய வடிவத்தைப் பெறுகிறது.

இராமகாதையின் தொன்மை குறித்த ஆய்வுப் பார்வை

சங்க இலக்கியங்களில் காணப்படும் இராமாயணக் குறிப்புகளின் காலத்தை அடிப்படையாகக் கொண்டு சில முக்கியமான முடிவுகளை முன்வைக்கலாம். அவை :

1. இராமகாதையின் கதைக் கூறுகள் தமிழ்நாட்டில் கம்பர் காலத்திற்கு முன்னரே இருந்தன.

2. சங்கப் புலவர்கள் இராமாயண நிகழ்வுகளைத் தமது பாடல்களின் கருத்துத் தேவைக்கேற்பப் பயன்படுத்தியுள்ளனர்.

3. சங்க இலக்கியங்களில் இடம்பெறும் நிகழ்ச்சிகள் பிற்காலத்தில் நிலைபெற்ற இராமாயணப் பிரதிகளுடன் முழுமையாக ஒத்துப்போகவில்லை. இது இராமகாதை மரபு பல்வேறு வடிவங்களில் வழங்கப்பட்டிருக்கலாம் என்ற ஆய்வுக் கருத்துக்கு இடமளிக்கிறது.

4. இராமாயணக் கதை மக்களிடையே பரவியிருந்ததை இலக்கிய உவமைகளின் வழியாக அறியமுடிகிறது.

என்பனவாகும். இங்கு ஒரு முக்கியமான வரலாற்றியல் எச்சரிக்கை தேவைப்படுகிறது. சங்கப் பாடல்களில் இராமாயணக் குறிப்புகள் இருப்பது, வால்மீகி இராமாயணத்தின் முழுமையான வடிவம் அக்காலத்திலேயே தமிழில் இருந்தது என்பதைத் தனித்து நிறுவாது. அதேபோல், சங்கப் பாடல்களை அடிப்படையாகக் கொண்டு தமிழில் ஒரு முழுமையான இராமாயணம் இருந்தது என்று உறுதியாக முடிவுசெய்யவும் முடியாது. அவை இராமகாதையின் தொன்மையான கதை மரபுத் தமிழ்ச் சூழலில் அறிமுகமாகியிருந்ததற்கான உறுதியான இலக்கியச் சான்றுகளாகும்.

இலக்கியம் என்பது ஒரு காலத்தின் கண்ணாடி மட்டுமன்று; பல்வேறு காலங்களின் பண்பாட்டு நினைவுகளைத் தன்னுள் பாதுகாக்கும் வரலாற்றுப் பெட்டகமுமாகும். சங்க இலக்கியங்களில் இடம்பெறும் இராமாயணக் குறிப்புகள் இதனைத் தெளிவுபடுத்துகின்றன.

புறநானூறு 378-ஆம் பாடலில் சீதையின் அணிகலன்களை எடுத்துக் குரங்குகள் அணிந்துகொள்ளும் காட்சியைப் புலவர் நகைச்சுவை உவமையாகப் பயன்படுத்தியுள்ளார். அகநானூறு 70-ஆம் பாடலில் இராமன் ஆலமரத்தடியில் பறவைகளின் ஒலியை அடக்கி ஆலோசனை செய்த நிகழ்வைத் தலைவியின் காதல் தொடர்பான அலர் அடங்கியதற்கு உவமையாகக் கையாண்டுள்ளார்.

இவ்விரு பாடல்களும் இராமாயணக் கதை சங்ககாலத் தமிழ்ச் சமூகத்தில் அறிமுகமான ஒன்றாக விளங்கியதற்கான முக்கியமான சான்றுகளாகும்.

குறிப்பாக, சங்கப் புலவர்கள் இராமாயண நிகழ்வுகளைத் தமது கவிதைச் சூழலுக்கேற்ப மாற்றியமைத்துக் கையாளும் திறன் அவர்களுடைய படைப்பாற்றலுக்குச் சான்றாக அமைகிறது.

இராமகாதை வடமொழியில் காப்பிய வடிவம் பெற்றிருந்தாலும், அதன் கதை மரபு தமிழிலக்கியத்தில் தனக்கென ஓர் இடத்தைப் பெற்றிருந்தது. சங்கப் பாடல்களில் விதையாக இடம்பெற்ற இராமகாதை, சிலப்பதிகாரத்தில் வளர்ந்து, கம்பரின் இராமாவதாரத்தில் பெருவிருட்சமாகப் பரிணமித்தது எனலாம்.

எனவே, சங்க இலக்கியங்களில் இடம்பெறும் இராமாயணக் குறிப்புகள் வெறும் இதிகாசச் செய்திகளாகக் கருதப்படாமல், தமிழரின் தொன்மையான இலக்கியப் பார்வை, பண்பாட்டுத் தொடர்பு, உவமைத்திறன், கதை மரபு ஆகியவற்றை நிறுவுகின்ற வரலாற்று இலக்கியச் சான்றுகளாக மதிக்கப்பட வேண்டும்.

சங்க இலக்கியம் இராமாயணத்தைப் பதிவு செய்தது மட்டுமல்ல; இராமாயணக் கதை மரபைத் தனது கவிதை மொழியில் மறுபடைப்பும் செய்திருக்கிறது என்பதே வெள்ளிடைமலை.

துணைநூற்பட்டியல்

1. கலித்தொகை, திருநெல்வேலித் தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட், 154 டி.டி.கே. சாலை, சென்னை - 1, பதிப்பு விவரம் இல்லை.
2. உ.வே. சாமிநாதையர், புறநானூறு மூலமும் உரையும், தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், பதிப்பு : 1985.
3. உ.வே. சாமிநாதையர், பரிபாடல் மூலமும் பரிமேலழகர் மூலமும் உரையும், கேசரி அச்சுக் கூடம், சென்னை, இரண்டாம் பதிப்பு : 1935.
4. அகநானூறு, களிற்றியானை நிரை, ராஜகோபாலார்யன் குறிப்புரை, கம்பர் புஸ்தகாலயம், மயிலாப்பூர், சென்னை, 1926.